**செய்தி வெளியீடு எண்: 135** **நாள்: 21.2.2008**

## பத்திரிக்கை செய்தி

## குடும்ப அட்டைதாரர்களுக்கு வேண்டுகோள்

குடும்ப அட்டைதாரர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுள்ள விவரங்களின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. தற்சமயம் மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கி வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்க போதுமானதாக இல்லை என்பதால் புதியதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் வழங்க இயலாத நிலை உள்ளது. எனினும் இவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென கருதி அரசு சீரிய நடவடிக்கை மேற்கொண்டு பொங்கல் 2008 முதல் மாதந்தோறும் தகுதியான புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் குடும்ப அட்டைதாரர்கள் பலர் சமையல் எரிவாயு இணைப்புகளையும் பெற்றுள்ளதோடு, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகள் மூலம் தொடர்ந்து மண்ணெண்ணெய் பெற்று வருவதாக பல புகார்கள் பெறப்பட்டு, ஆய்வில் உண்மை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே சமையல் எரிவாயு இணைப்பு பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்களை இனம் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்குரிய அடுத்த மாற்று சிலிண்டர்களுக்கு பதிவு செய்யும்போது குடும்ப அட்டைகளை எரிவாயு விநியோகஸ்தர்களிடம் கொண்டு சென்று எரிவாயு இணைப்பு விவரங்களை குடும்ப அட்டையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் குடும்ப அட்டை இல்லாதவர்கள்” அட்டை இல்லை” (No card Certificate) என்பதற்கான சான்றினை சம்பந்ததப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையாளரிடம் பெற்று அல்லது புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்து அதற்கான ஒப்புதல் சீட்டை பெற்று எரிவாயு விநியோகஸ்தரிடம் காண்பித்து தொடர்ந்து எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**